**தலைப்பு 291 – கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 பொது கணக்கீட்டு கொள்ளைகளுடன் இணங்காமை

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் நூலகத்தால் பராமரிக்கப்படும் புத்தகங்களின் பெறுமதி நிதியல்லா சொத்தாக கணக்கிடப்படவில்லை..2019 மற்றும் 2020 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி முறையே ரூபா 295,544 மற்றும் ரூபா 99,913 ஆகும். | நூலகத்திற்கான புத்தகங்கள் மீண்டெழும் செலவின ஏற்பாட்டை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டது.மற்றும் புத்தத்தின் பெறுமதி 5000 ரூபாவை விட அதிகரிக்கவில்லை.(சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை 04/2018 இன் படி,பெறுமதி 5000 ரூபாவை விட அதிகமாகும் பொழுது நிதியல்லா சொத்தாக காட்டப்பட வேண்டும்.)அதன்படி,நிதி அல்லா சொத்து மீதி சரி என்பதை அறிய தருகிறேன். | புத்தகத்தின் பெறுமதி ரூபா 395,457 என்பதால் நிதியல்லா சொத்தாக காட்டப்பட வேண்டும். |

## 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

### மீண்டெழும் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிசெயலாற்றல் கூற்றில் மீண்டெழும் செலவினத்தை வகைப்படுத்தும் போது சம்பளம் கூலி மற்றும் வேறு ஊழியர் நலன்கள் ரூபா 231,804,829 ஆக இருந்த போதிலும்,ரூபா 246,042,575 ஆக காட்டப்பட்டது மற்றும் பிற பொருள் மற்றும் சேவைகள் செலவு ரூபா 49,360,725 ஆக இருந்த போதிலும்,ரூபா 35,122,979 ஆக காட்டப்பட்டது.அதாவது பிற இருப்பு மற்றும் சேவை செலவுகளாக கருதப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போக்குவரத்து செலவு ரூபா 14,237,746 ஆனது சம்பளம் கூலி மற்றும் வேறு ஊழியர் நலன்களாக காட்டப்பட்டது. | சம்பளம் கூலி மற்றும் வேறு ஊழியர் நலன்களின் கீழ் உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்து செலவுகள் உள்ளடக்கியிருப்பதால் நிதி செயல்திறன் கூற்றில ரூபா 246,642,575 ஆகவும் வேறு பொருட்கள் மற்றும் சேவைகள் ரூபா 35,122,979 ஆக இருப்பதும் சரியானது. | உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்து செலவுகளானாது கூலி மற்றும் வேறு நலன்களாக எடுத்து கொள்ளப்படாமல் பிற பொருட்கள் மற்றும் சேவை செலவுகளாக எடுத்துகொள்ளப்பட வேண்டும். |

## 1.6.3 காசுபாய்ச்சல் கூற்று

### வருமானம் அல்லாத பற்றுசீட்டுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வேறு பற்றுசீட்டுகள் ரூபா 36,089,155 காசுபாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி பற்றுசீட்டாக குறிப்பிடப்பட்டது. | நிதிசுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் வழிகாட்டல் 6 இன் ,எவ் ஆர் 150, மற்றும் 151 இன் 7 (ii) பந்தி 10.1 இன்படி, வருமானம் அல்லாத பற்றுசீட்டுகளானது கட்டுநிதி பற்றுசீட்டாக காட்டப்பட்டது. | இது காசுபாய்ச்சல் கூற்றில் வேறு பற்றுசீட்டாக குறிப்பிடப்பட வேண்டும். |

## 1.6.4 பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

திணைக்கள ஒழுங்குவிதிமுறை 214 இன் படி பொறுப்புகள் பற்றிய சரியான மற்றும் புதுப்பித்த பதிவை பராமரிக்கவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 31 டிசம்பர் 2020 இன் படி ரூபா 3,204,121 பொறுப்புகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை மற்றும் மீளாய்வாண்டிற்கான சேமிப்பு அந்த பொறுப்புகளை தீர்க்க போதுமானதாக இல்லை.291-1-1-0-1301-11, 291-1-1-0-1409-11 மற்றும் 291-1-1-0-2003-11 ஆகிய செலவினங்களுக்கு அதிக ஒதுக்கீடு செய்யப்பட்டதை அவதானிக்க முடிந்தது. | மார்ச் 2020 முதல் நாட்டில் நிலவும் தொற்று நோய் சூழ்நிலை காரணமாக உரிய நேரத்தில் பற்றுசீட்டுகளை சமர்ப்பிக்காததால் எவ்ஆர் 66 இன் மூலம் மீதமுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் சேமிப்புகளை போதிய செலவில்லாத விடயங்களிற்கு மாற்றுவதற்கு சந்தர்ப்பம் இல்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன். | ஏற்பாடுகளை மீறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 முற்பணங்களை தீர்த்தல் மற்றும் வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| எவ்ஆர் 371 இன் படி, வேலை முடிந்தவுடன் உடனடியாக பெறப்பட்ட உறுதிமொழி தொகைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்றாலும்,10 அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த தொகையான ரூபா 654,050 வேலை முடிந்து 1 மாதம் முதல் 11 மாதம் வரையான தாமதத்திற்கு பிறகு செலுத்தப்பட்டது. | முற்பணங்கள் நிதியாண்டு ஆரம்பத்தில் பெறப்பட்டு இறுதி ஆண்டில் செலுத்தப்படும்.முற்பணமானது பணி அதிகாரிகளுக்கு மட்டும் வழங்கப்படுவதால் விழிப்புணர்வு பயிற்சிபட்டறை,கள ஆய்வு பணிகள் மற்றும் தள ஆய்வு பணிகள் ஆகியவை பணிப்பாளர் அலுவலகர் மேற்பார்வையில் தொழில்நுட்ப அலுவலகர் மற்றும் கள அலுவலகர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.இந்த ஊழியர்கள் பிரதேச அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணி புரிவதால் முற்பணத்தை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதால் தாமதங்கள் ஏற்படும் என்பதை அறிய தருகிறேன். | எவ்ஆர் 371 இன் படி செயற்பட வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) செலுத்தப்பட வேண்டிய கடன்களில் 5ஆண்டுகளில் இறந்த அதிகாரியின் கடன் மீதி ரூபா 53,466 மற்றும் 5 ஆண்டுகளில் பதவி விலகிய 5 ஊழியர்களின் கடன்மீதி மொத்தமாக ரூபா 373,772 ஆகும். | செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 86,993 தவணை முறையில் செலுத்த ஒப்புகொள்ளப்பட்டது. இரண்டு ஊழியரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 25,066.67 பதிவழிப்பதற்கு இரண்டு ஊழியரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தற்போதைய மீதி ரூபா 265,712.00 அறிவிடப்பட்டது மற்றும் எதிர்காலத்தில் இந்த மீதியை உடனடியாக புத்தகத்தில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்ஆர் 113(6) இன் படி நான் நடந்து கொள்கிறேன். | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்க வேண்டும். |
| (ஆ) 27 ஜீன் 2019 திகதியிட்ட பொது நிதி சுற்றறிக்கை இல 05/2019 இன் 03 (அ) பிரிவின் படி,ஊழியர் இடமாற்றம் செய்யப்பட்டு 03 மாதங்கள் கழிந்த பிறகு திணைக்களங்களிடையே செலுத்தப்படாத கடன் தொகையை காட்டாமல் இருக்க வேண்டிய போதிலும், 04 செப்ரெம்பர் 2020 அன்று இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர் கடன் தொகை ரூபா 138,500 இன்னும் செலுத்தப்படவில்லை. | 2021 ஏப்ரல் மாதத்திற்குள் கணக்குகளை தீர்க்குமாறு ரயில்வே திணைக்களத்திடம் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் படி செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளின் செயல்திறன் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீன்பிடி துறைமுகங்கள் அருகே தொடர்ந்து நிரப்பும் மணலை அகற்றும் பணிக்கு ஒரு கன சதுரத்திற்கு ரூபா 250 அறவிடுவதற்கு மீன்வள துறைமுக கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.மற்றும் 1/3 அகற்றும் மண் கடற்கரையில் சரியான இடத்தில் நிரப்ப வேண்டும்.இந்த வேலை கூட்டுதாபனத்தால் வேறு தனிப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.மற்றும் மாதிரி சோதனையின் படி,பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் 2750 கனசதுர மணல் அகற்றப்பட்டாலும் 818 கனசதுர மணல் மட்டுமே கடற்கரையில் நிரப்பப்பட்டது.மற்றும் பாணந்துறை துறைமுகதில் 550 கனசதுர மணல் அகற்றப்பட்டாலும் 177 கனசதுர மணல் மட்டுமே கடற்கரையில் நிரப்பப்பட்டது.மேலும்,அகழப்பட்டு எடுக்கப்படாமல் இருக்கும் மணல் மலைவடிவில் கடற்கரையில் குவிந்துள்ளன.மீன்பிடி துறைமுகங்களில் தொடர்ந்து நிரப்பப்படும் மணலை அகற்றி கரையோர அரிப்பு பகுதிகளில் கொட்டுவதற்கு திணைக்களங்கள் மிகவும் பயனுள்ள முறையை வகுத்து நிர்வகிக்கவில்லை. | மீன்பிடி துறைமுகங்களில் மணல் அகற்றப்படுவதை தடுப்பதற்கு கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் விசேட செயற்திட்டம் ஒன்று செயற்பட்டு வருகிறது. | கடலோர வள முகாமைத்துவ திணைக்களத்தால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 29 பெப்ரவரி 2020 இருந்து 21 ஏப்ரல் வரை ரூபா 889 மில்லியன் செலவிடப்பட்ட தென் கொழும்பு மணல் ஊட்டமளித்தல் | கொழும்பு தெற்கு மணல் ஊட்டமளித்தல் திட்டத்திற்காக கடல் | அக்ரோனோமிக் ஆய்வு நடத்தப்பட்டதற்கான எழுத்துபூர்வமான ஆதாரம் |

| | | |
|---|---|---|
| திட்டத்திற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் பின்வரும் காரணிகளால் அடையப்படவில்லை.<br>(அ) 1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிமுறைகள் (1) இன் படி,மத்திய சுற்றாடல் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட துணைநிறுவனத்தால் திட்டங்களை அனுமதிக்கும் முகவர்களால் திட்டங்களை அனுமதிக்க அனுமதி பெற வேண்டிய போதிலும்,மணல் ஊட்டமளித்தல் மீதான திட்டத்தின் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை அல்லது அனுமதி பெறப்படவில்லை. | அடியில்(அக்ரோனோமிக் ஆய்வு) முன்னும் பின்னும் ஒப்பீடுகள் செய்யப்பட்டன.<br><br>உத்தேசிக்கப்பட்ட கடற்கரை தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது.இயற்கை நீச்சல் குளத்திற்கு சேதமோ அழிவோ ஏற்படவில்லை.<br><br>மேற்கு கடற்கரை என்பது நேரான கடற்கரை.மேலும் கடலோர மணல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பாய்கிறது.<br><br>மணல் அள்ளும் பகுதிகள் மேற்கு கடற்கரையை சேர்ந்ததால் மணல் ஓடை ஒடுகிறது.இது ஒரு இயற்கையான எதிர்வினை. அதன்படி,கடந்த ஆண்டுகளில் மணல் தட்டுபாடு மற்றும் படிவு போன்றவற்றால் அரிக்கப்பட்ட பகுதிகளுக்கு இயற்கையாகவே ஊட்ட மணல் கொண்டு செல்கிறது. | எதுவுமில்லை.தேவையான அனுமதி மற்றும் சாத்தியகூறு ஆய்வு நடத்தப்படவில்லை என்பதாலும் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியவில்லை. |
| (ஆ) நிறுவனத்திற்கு வெளியே உள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்தால் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டிய போதிலும், இந்த நிறுவனத்தின ஊழியர்களால் செய்யப்படவில்லை.மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உப குழுவினால் வழங்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறை வழிகாட்டலின் படி, சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு செய்யப்படவில்லை. | | |
| (இ) திட்டத்தின் எதிர்கால நன்மை மற்றும் அந்த நன்மைகளை பெறுவதற்கான கால அளவு,பராமரிப்பு மற்றும் எதிர்கால அபிவிருத்தி ஆகியவை சாத்தியகூறு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.சாத்தியகூறு ஆய்வு அறிக்கை தகுந்த நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு கொண்ட | | |

நபர்களால் கையொப்பமிடப்படவில்லை மற்றும் உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஈ) நிதி ஒழுங்கு விதிகள் 35 (1) இன் படி,ஒரு திட்டத்தை தொடங்க முன் அனுமதி தேவை என்றாலும்,மணல் மீள் ஊட்டமலித்தலுக்காக எதிர்பார்க்கப்படுத் கடற்கரை அரிப்பு பகுதியின் அரிப்பு அளவு,அரிப்பு ஏற்பட்ட விதம், திட்டம் உள்ளடக்கிய அளவு மற்றும் திட்ட செலவு மதிப்பிடப்படவில்லை மற்றும் முன்கூட்டிய அனுமதி பெறப்படவில்லை.

(உ) இலங்கையில் இத்தகைய திட்டங்களிற்கு பத்திமெற்றிக் ஆய்வுகள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக நிறுவப்பட்ட சர்வதேச ரீதியில் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் நிபுணத்துவ தேசிய கணக்கெடுப்பு நிறுவனமான நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்திடம் இருந்து இத்திட்டம் பற்றி பூர்வாங்க தூண்டல் கணக்கெடுப்பை நடத்த எந்த நடவக்கையும் ஆலோசனையும் பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) இலங்கையின் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் மேற்கொள்ளப்படும் திட்டத்திற்கு சுற்றுச்சூழலுக்கும் நீர்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கண்டறிந்து தடுப்பது குறித்து சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்க வேண்டும்.ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

(எ)கரையோர மணல் அள்ளுவதற்கு தேவையான மணல் தொடர்பான அறிக்கையை பெற்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும்,செல்லுபடியாகும் ஆய்வு அனுமதி இன்றி இந்த திட்டத்திற்காக மணல் பெறப்பட்டது.

(ஏ) இத்திட்டத்தின் மதிப்பீட்டின் போது கொள்ளுபிட்டி முதல் கல்கிசை வரையான கடற்கரையை 10 கிலோமீற்றர் எல்லை வலயமாக

நிலைப்படுத்துவதற்காக 800,000 கன மீற்றர் மணல் இயந்திரம் மூலம் மணல் அள்ளுவதற்கு திட்டமிடப்பட்டது.அது பின்னர் கல்கிசையில் இருந்து அங்குலான வரை மணலை ஊட்டுவதற்கு எந்தவித தர்க்கரீதியான ஏற்றுகொள்ளகூடிய காரணமும் இல்லாமல் மாற்றப்பட்டது.மேலும் அந்த பகுதிகளுக்கு எவ்வளவு மணல் அள்ள வேண்டும் என்பது குறித்த மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை.மேலும்,களுகங்கை முகத்துவாரத்திற்கு அருகில் உள்ள இயற்கை மணல் மேட்டை அகற்றியதால் ஏற்பட்ட கரையோர அரிப்பை சரி செய்வதற்காகா 2017 ஆம் ஆண்டு வெள்ளக்கட்டுபாட்டுக்கு பயன்படுத்தப்பட்ட களுத்துறை கலிடோவை நிறுவுவதும் திட்டத்தில் அடங்கும்.இதன்படி, கல்கிசை முதல் அங்குலான வரையிலான மணல் அகலும் திட்டத்தின் பரப்பளவு குறைக்கப்ட்டு,களுத்துறை கலிடோ கடற்கரைக்கும் ஒரு அளவு மணல் சேர்த்து 800,000 கன மீட்டர் மணல் விநியோகிக்கப்பட்டது.எனவே மணல் அள்ளும் பகுதிகளின் உண்மையான தேவைகள் மற்றும் அளவுகள் துல்லியமாக அடையாளம் காணப்படவில்லை மற்றும் தர்க்கரீதியான மதிப்பீடுகள் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஐ) கல்கிசை,அங்குலான,களுத்தறை கலிடோ மணல் ஊட்ட தேவைக்காக முறையே 150,000, 300,000 350,000 கன மீட்டர் என மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் அடையாள மற்றும் நேரடி ஒப்பந்த ஏல மதிப்பிடப்பட்ட செலவு முறையே 175,000 , 425,000 மற்றும் 200,000 கன மீட்டர் என மாற்றப்பட்டு இருந்தது.மணல் அகல்வதற்கான விலையானது கல்கிசை மற்றும் அங்குலானைக்கு முறையே ஒரு கனமீட்டருக்கு ரூபா 610 ஆகவும் களுத்துறை கலிடோவிற்கு ருபா 560 ஆகவும்இருந்தது.அதன்படி,மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 590,000,000 ஆக இருந்தது.ஏல அழைப்பு முலம் பெறப்பட்ட கேள்வி பத்திரங்கள் உயர் பெறுமதியில் காணப்பட்டதால் மதிப்பிடப்பட்ட செலவுகள் பொருத்தமற்றதாக அவதானிக்கப்பட்டது. எனினும் நேரடி கேள்வி அழைப்பாக

ரூபா 844,364,684 குறைந்த விலையில் வெளிநாட்டு தனியார் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டது.அதன்பின்னர் திறந்த சந்தையில் ஏலம் கோரப்பட்டு அதே நிறுவனத்தால் ரூபா 889,208,700 குறைந்த ஏலத்தொகை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்,பெறுகைகள் குழு அதனை ஏற்க முடிவு செய்தது.அதன்படி, திணைக்களத்திற்கு ரூபா 44.84 மில்லியன் நட்டம் ஏற்பட்டது.

(ஒ) கல்கிசை மற்றும் களுத்துறையில் மணல் அகலும் செயல்முறை குறிப்பீட்டின் படி, பயன்படுத்தப்பட வேண்டியது வெளிகொணர்தல் மற்றும் வேகமான முறையாகும்.ஆனால் கல்கிசைக்கு மணல் இயந்திர முறை மற்றும் களுத்துறைக்கு நேரடி மாற்றீடு முறை பயன்படுத்தப்பட்டது.

(ஓ)கொழும்பு தெற்கு மணல் ஊட்டமளித்தல் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் உள்ள நிலைமைகள் குறித்த நனோமெட்ரிக் ஆய்வு கணணி தரவுகளின் அடிப்படையில் கடற்கரையில் இருந்து அகற்றப்பட்ட மணலின் அளவீட்டு முறை பரிசோதிக்கப்படவில்லை. மேற்குறிப்பிட்ட மணல் அகலும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து தற்போது நிலவும் நிலைமை பின்வருமாறு.

- கல்கிசை ஹோட்டலுக்கு அருகில் உள்ள இயற்கை நீச்சல் குளம் அழிக்கப்பட்டது.

- மணல் நிறைந்த பகுதிகளில் பெரிய சாய்வுகளில் படகு கவிழ்ந்து மீன்பிடி வலைகளுக்கு இடையூறு விளைவித்தது.

- மணல் அகலும் இடங்களில் இருந்து அதிக அளவு மணல் கடலில் கலக்கப்படுகின்றது.

- மற்ற கடலோர பகுதிகளில் மணல் குவியலாக குவிக்கப்பட்டு,அத்தகைய இடங்களில் கடற்கரையை மீண்டும் அரித்து ஏற்கனவே இருந்த நிலைக்கு திரும்பின.

## 3.3 திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2012 முதல் 28 பெப்ரவரி 2021 வரை அங்கீகரிக்கப்படாத 2162 நிர்மாணங்கள் அடையாளம் காணப்பட்டன.அவற்றில் 1967 இடிக்க உத்தரவிடப்பட்ட போதிலும்,450 மட்டுமே இடிக்கப்பட்டன. மேலும், 195 நிர்மாணங்கள் அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்கள் என கண்டறியப்பட்ட போதிலும், கட்டளைகள் பிறப்பிக்கப்படவில்லை.பௌதீக கணக்காய்வு படி, கல்கிசை தொடக்கம் வெள்ளவத்தை வரையான கரையோரத்தில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நிர்மாணங்களும் அரசாங்கத்திற்கு சொந்தமான பகுதியில் மேற்கொள்ளப்பட்டதாகவும்,நிர்மாணங்கள் அனுமதியற்றவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது.2011 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கடற்கரை பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ சட்டத்தின்படி,இவ்வாறான நிர்மாணங்களை இடிக்கும் அதிகாரம் திணைக்களத்திற்கு இருந்த போதிலும்,சமூக,பொருளாதார மற்றும் அரசியல் காரணங்களால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் அங்கீகாரமற்ற நிர்மாணங்களின் எண்ணிக்கை கணிசமாகவும் நடைமுறையிலும் அதிகரித்துள்ளது.கடந்த காலங்களில் இடம்பெற்ற சட்டவிரோத நிர்மாணங்கள் மீதான தாக்கங்கள் மீது திணைக்களம் செயற்படாத நிலை காணப்பட்டது. | இது தொடர்பான விளக்கமும் தற்போதைய முன்னேற்றம் குறித்த விரிவான அறிக்கையும் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறிய தருகிறேன். | திணைக்களம் நடைமுறைப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களை கண்டறிந்து நடைமுறைபடுத்த கூடிய மாற்றுவழியை வகுக்க வேண்டும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ)நிதியல்லா சொத்து கூற்றில் 31 டிசம்பர் 2019 இல் நிதியல்லா சொத்தின் பெறுமதி ரூபா471,658,540 ஆக இருந்த போதிலும்,01 ஜனவரி 2020 இல் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் மற்றும் வேறு மாற்றங்கள் உள்ளடங்கலாக ஆரம்ப மீதியாக ரூபா 507,570,789 காணப்பட்டது. | மொரட்டுவ,காலி,நீர்கொழும்பு மற்றும் கொடவேவா அலுவலகங்களின் பெறுமதிகள் காணி மற்றும் கட்டிடங்கள் என ஒற்றை பெறுமதியாக கணக்கிடப்பட்டிருந்த நிலையில், 2020 ற்கான எஸ்ஏ/ஜிஎவ்எஸ்/01/01/08 அரச கணக்கு சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் படி, காணி கட்டிடங்களாக தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். அந்த நேரத்தில் ரூபா 176,275,000 மதிப்பானது நிலம் மற்றும் கட்டிடத்தின் மதிப்பில் இருந்து கழிக்கப்பட்டு மீண்டும் இருப்பு தொகையில் உள்ளடக்கபட்டது.<br>மேலும்,<br>2020.02.05 ரூபா 57,753,000<br>2020.05.28 ரூபா2,800,000<br>2020.07.08 ரூபா14,528,000<br><br>ஆரம்ப இருப்பு மூலம் மதிப்புகள் உள்ளிடப்பட்டன.அதன்படி, இந்த ஆரம்ப மீதி மாற்றம் நடந்துள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன். | வருடத்தில் செய்யப்பட்ட மாற்றங்களை ஆரம்ப மீதியில் மாற்றம் செய்வது சரியில்லை. |
| (ஆ)திருகோணமலை,மட்டக்களப்பு,சிலாபம் ,யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் உள்ள திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களின் மொத்த பெறுமதி 0.4651 ஹெக்டெயர்,165 பேர்ச் காணி மற்றும் 14060 சதுர அடி கட்டிடங்கள் என மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படவில்லை. | திருகோணமலை மற்றும் மதுகங்கை சுற்றாடல் நிலையங்களில் இருந்து மதிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு 22.05.2020 அன்று மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு 23.03.2021 அன்று நினைவூட்டல் அனுப்பப்பட்டது. | இந்த கட்டிடங்களின் மதிப்பை மதிப்பீடு செய்து கணக்கு காட்ட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ)திணைக்களத்திற்கு சொந்தமான மாத்தறை,கொடவாய சுற்றாடல் நிலையங்கள் மொரட்டுவ,சிலாபம்,மதுகங்க ஆகிய சுற்றாடல் நிலையங்கள் மற்றும் யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை பிரதேச அலுவலகங்களிற்கு சொந்தமாக காணி மற்றும் கட்டிடங்களை அபகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த கட்டிடங்களை ஒப்படைக்குமாறு 12.03.2018,08.09.2020 மற்றும் 27.11.2020 ஆகிய திகதிகளில் கடிதம் மற்றும் நினைவூட்டல் மூலம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. | பணி நியமன அறிக்கைகளை விரைந்து பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்ட 23 வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டு வரை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. | திணைக்களத்துக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் மதிப்பீட்டிற்கும் மற்றும் GF-8749,LN-4672,GJ-3942,PE-2166 வாகனங்கள் ஏற்கனவே மதிப்பிடப்பட்டு அனுப்பபட்டன. | அனைத்து வாகனங்களும் மதிப்பிடப்பட வேண்டும் மற்றும் அந்த பெறுமதி கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு பிரிவினால் முக்கியமான விபரங்களை மற்றும் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மற்றும் அனுமதி பத்திரம் வழங்கல்,பிரதேச அலுவலகங்களை மேற்பார்வை செய்தல் போன்ற முறையான உள்ளககட்டுபாடு தயாரிக்க பட வேண்டிய போதிலும்,இது தொடர்பாக குறைவான கவனம் செலுத்தப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள முறைமையை பேணுவதற்கு மேற்பார்வை செய்வதற்கு ஊழியர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கின்றேன். | உள்ளக கணக்காய்வு முன்மொழிவுகளை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

.

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 31 டிசம்பர் 2020 இன் படி,திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் 542 ஆக இருந்தனர்.ஆனால், உண்மையான ஊழியர்கள் 416 மற்றும் 126 வெற்றிடங்கள் காணப்பட்டன.அதில் 14 சிரேஷ்ட மட்ட பதவிகள் 60 இளமட்ட பதவிகள் மற்றும் 52 கீழ் மட்ட பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.இந்த வெற்றிடங்கள் காரணமாக திணைக்களத்தின் முக்கிய நோக்கத்தின் படி,உரிய பதவிகள் அடையாளம் காணப்பட்டு வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்தில் உள்ள பதவி வெற்றிடங்கள் கண்டறியப்பட்டு, அந்த வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்து கொள்கின்றேன். | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |